II ADJ COURT TRICHY

DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :222/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness - 6 (LW -8)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.செல்லதுரை | Caste | : | |
| Father Name | : | திரு.லெட்சுமணன் | Calling | : | காவல் ஆய்வாளர் |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **17.07.2026.**

**PW -6 (LW -8 )**

(எதிரிகள் ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது முசிறி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.03.2025–ம் தேதி காலை 07.00 மணியளவில் நாமக்கல்–திருச்சி ரோட்டில் முசிறி பெரியார் பாலம் பகுதியில் போலீஸ் பார்ட்டியுடன் ரோந்து பணியில் இருந்த பொழுது TN–48–AJ–8255 என்ற ஹீரோ ஹோண்டா இரு சக்கர வாகனத்தை சோதனையிட்டு பார்த்த பொழுது 1–வது எதிரி உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடிய 40 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டுகளை 2–வது எதிரியிடம் இருந்து பெற்று விற்பனைக்காக வைத்திருந்ததை கண்டுபிடித்து அவரை கைது செய்து அந்த பாக்குகளை மகஜர் மூலம் கைப்பற்றினேன். ஹான்ஸ் புகையிலை நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதிமன்ற உத்தரவு மூலம் அழிக்கப்பட்டது. ஹான்ஸ் புகையிலை கைப்பற்றியதற்கான மகஜர் **அ.த.சா.ஆ.1** ஆகும்.

1.வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு பரிந்துரைத்தேன். நிலையத்தில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.80/2025 படி பிஎன்எஸ் பிரிவுகள் 275, 123 மற்றும் சட்டப்பிரிவு 6, 24(1)–ன் கீழ் COTPA சட்டப்படி பதிவு செய்த அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆகும். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் தயார் செய்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3**, வரைபடம் **அ.த.சா.ஆ.4** ஆகும்.

எதிரியிடம் கைப்பற்றிய வாகனம் மற்றும் செல்போனிற்கான புகைப்படம் **அ.த.சா.ஆ.5** ஆகும். பின்பு சாட்சிகளை விசாரித்து புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் 2–வது எதிரி முன்பிணை பெற்றுவிட்டார்.

**<u>எ.த.கு.வி</u> :**

| | |
|---|---|
| **கேள்வி** | அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ள நபர்களை அன்றைய தினம் ரோந்து பணிக்கு சென்றதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் 1.வது எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், அவர் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் பேரில் எந்தவித பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு சாட்சிகளிடம் கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | எதிரிகளுக்கும் கைப்பற்றிய பொருட்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

HIGH COURT JUDICATURE (watermark)

<u>**மறுவிசாரணை**</u> **:** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 17.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 17.07.2026

II ADJ COURT, TRICHY